**தலைப்பு 333 – கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியேகத்தரினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் அலுவலகம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 2006.02.00 வருமான குறியீட்டிற்கு ரூபா 400,000,000 வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 188,384,750 தொகை சேகரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 211,615,250 தொகை அல்லது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 53 சதவீதம் சேகரிக்கப்பட முடியாதிருந்தது. | 2021 இல் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு மேலும் மீளாய்வுக்காக எடுக்கப்பட்டதுடன் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 220 மில்லியன் கூட்டுமொத்தம் என நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு 2021.08.30 இல் அறிவிக்கப்பட்டது. | வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல் இயன்றவரை சரியாகவும் யதார்த்தமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 செலவின விடயங்களிற்காக ரூபா 2,100,000 கூட்டுமொத்தமான தேறிய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த நிதியேற்பாடு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படாததால் மொத்த | அரசாங்க செலவினங்களை மீளாய்வு செய்தல் தொடர்பான 2021.08.30 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. அதன் பிரகாரம் ஒதுக்கீடு தேவைப்பட்ட | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீட்டைத் தயாரித்தல் இயன்றவரை சரியாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | போதிலும் அந்த நிதியேற்பாட்டை முடக்குமாறு வரிசை அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டது. | யதார்த்தமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 13 செலவின விடயங்களிற்காக ரூபா 40,300,000 கூட்டுமொத்தமான மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந் நிதியேற்பாட்டில் ரூபா 23,079,363 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 17,220,637 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.<br><br>ஒவ்வொரு செலவின விடயத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டில் 24 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சில் அந்த சேமிப்பு காணப்பட்டது. | -மேற்படி- | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு இயன்றவரை சரியாகவும் யதார்த்தமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பணிகளின் எதிர்பார்த்த நோக்கங்களை முழுமையாக அடைந்துகொள்ள முடியவில்லை. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துகளையும் அறிக்கையிடுவதற்கான மத்திய தரவு முறைமையை உருவாக்குவதற்கான புதிய மென்பொருளை அறிமுகப்படுத்தும் பணியின் செயலாற்றல் 50 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | புதிய மென்பொருளை அறிமுகப்படுத்தும் பணியின் செயன்முன்னேற்றம் ITMIS செயற்திட்டத்தின் முன்னேற்றத்தில் தங்கியுள்ளது. மேலும் இது கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை முழுமையாக அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் அறிக்கையிடுவதற்கான தரவு முறைமையை அறிமுகப்படுத்துதலின் செயலாற்றல் 75 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நிதியல்லாத சொத்துக்களுக்கான தரவு முறைமையை அறிமுகப்படுத்துவதன் செயன்முன்னேற்றம் திருப்திகரமான அளவில் உள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை முழுமையாக அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலகப் பதவியணியினரில் 15 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் 08 சிரேஷ்ட நிலையில் காணப்பட்டது. | கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக சேவை தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு பதவிகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதவியணியினரில் வெற்றிடங்கள் இருப்பது பாதகமாக தாக்கத்தை ஏற்படுத்தினால், அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |